www.kalvisolai.com

# மேல்நிலை முதலாம் ஆண்டு

## வணிகவியல்

## மாதிரி வினாத்தாள்

நேரம் : 2½ மணி மதிப்பெண் : 90

**பகுதி – I** 20 x 1 = 20

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வியாபாரத்தின் அடிப்படை நோக்கம் -----------

அ) இலாபம் பெறுவது ஆ) பணியாளருக்கு உதவுவது

இ) சமூகத்திற்கு உதவுவது ஈ) வியாபாரிகளுக்கு உதவுதல்

2. இடத்தடையைப் போக்க உதவுவது ----------

அ) வியாபாரம் ஆ) போக்குவரத்து

இ) பண்டகக் காப்பு ஈ) காப்பீடு

3. ஏற்றுமதிக்கென பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டால் அவை ----- என அழைக்கப்படும்.

அ) வெளிநாட்டு வியாபாரம் ஆ) உள்நாட்டு வியாபாரம்

இ) மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ) வியாபாரம்

4. கழிவு முகவர்கள் ----------- சந்தையிடலில் முக்கிய பங்கு வகிப்பவர்

அ) தொழிற்சாலை ஆ) விவசாயப் பொருட்கள்

இ) நிதிச்சார்பு ஈ) வியாபாரம்

5. குறைபாடுள்ள, இயலாதவர்கள் மற்றும் வயது முதிர்வுள்ள நபர்களுக்கு இந்த சேவை வாணிகம் உதவுகிறது -----------

அ) மின்னணு வாணிகம் ஆ) தவணை முறை விற்பனை

இ) தொலைத் தொடர்பு வழி வாணிகம் ஈ) மடங்குக் கடை

6. ------------ ஆம் ஆண்டில், ராக்டேல் முன்னோடிகள் நேர்மைச் சங்கம் என்ற அமைப்பை நெசவாளிகள் உருவாக்கினர்.

அ) 1945 ஆ) 1944 இ) 1844 ஈ) 1845

7. நீராவி என்ஜினை கண்டுபிடித்தவர் யார் ?

அ) ஜேம்ஸ்வாட் ஆ) கோபால் ஆர்பட்

இ) மோகினி சேத்தி ஈ) பி.கே.கோஸ்

8. இயற்கையின் பரிசு ------------

அ) நீர் ஆ) காற்று இ) நிலம் ஈ) கால்வாய்

9. இறக்குமதி வணிக நடைமுறை இத்துடன் ஆரம்பமாகிறது

அ) வியாபார விசாரணை ஆ) விலைப்புள்ளி பெறுதல்

இ) சரக்குத் தேவைக் குறிப்பீடு இடுதல் ஈ) கடன் கடித ஏற்பாடு செய்தல்

10. இறக்குமதியாளரிடமிருந்து பணம் பெறும் முறை

அ) மாற்றுமுறை ஆவணங்கள் பெறுதல் ஆ) மாற்றுமுறை ஆவணத்தை வட்டம் செய்தல்

இ) கடன் கடிதம் பெறுதல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

11. அரசாங்க உதவியிடன் ஏற்படுத்தப்பட்ட பண்டக சாலை நிறுவனங்கள்

அ) இந்திய உணவு வழங்கும் கழகம் ஆ) வீட்டுச் சாதன பொருட்கள் வைப்பகம்

இ) தனியார் பண்டகக் காப்பகம் ஈ) கூட்டுறவு பண்டக சாலை

12. பண்டக சாலையை, பொருட்கள் --------------- மையம் என்றும் கூறலாம்

அ) கொள்முதல் ஆ) விற்பனை

இ) வழங்கும் ஈ) பிணைய காப்பு

13. தனித்து இயங்கும் உள்நாட்டு வங்கியர்கள் ----------- கட்டுப்பாட்டின் கீழ் வராதவர்கள்

அ) இந்தியன் வங்கி ஆ) கனரா வங்கி

இ) மைய வங்கி ஈ) கூட்டுறவு வங்கி

14. வங்கியர் இதை உற்பத்திச் செய்பவர் எனவும் கூறலாம்

அ) பணம் ஆ) கடன்

இ) வைப்பு ஈ) மேல் வரைப் பற்று

15. மருத்துவக் காப்பீடு திட்டம் A–ன்படி, அதிகபட்ச பயன் எவ்வளவு ?

அ) ரூ.10,000 ஆ) ரூ.1,50,000 இ) ரூ.1,00,000 ஈ) ரூ.3,00,000

16. காப்பீடு எதை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது ?

அ) கூட்டுறவு ஆ) வங்கியியல் இ) நிதியியல் ஈ) வணிகவியல்

17. இது ஒரு ஒலி, ஒளி விளம்பரச் சாதனமாகும்

அ) வானொலி ஆ) திரைப்படம் இ) சுவரொட்டி ஈ) மின்விளக்கு விளம்பரம்

18. --------- ஆம் ஆண்டில் ஹாட் வையர்ட் இணைய தளத்தின் முதல் இணைய தள விளம்பரம் வெளியானது.

அ) 1975 ஆ) 1984 இ) 1912 ஈ) 1994

www.kalvisolai.com

19. 'நுகர்வோரியலின் தந்தை' என கருதப்படுவர் யார் ?

அ) ரால்ப் நேடர் ஆ) மகாத்மா காந்தி

இ) திரு.ஜான் எப். கென்னடி ஈ) எச் பஸ்கிர்க் மற்றும் ஜேம்ஸ்

20. ---------- நாள் ஒவ்வொரு ஆண்டும் நுகர்வோர் நாளாக கொண்டாடப்படுகிறது

அ) 15 மார்ச் ஆ) 15 நவம்பர் இ) 8 மே ஈ) 5 செப்டம்பர்

## பகுதி – II 7 x 2 = 14

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும், அவற்றில் வினா எண்.21–ற்கு கட்டயமாக விடையளிக்கவும்**

21. வணிகத்தை வரையறுக்கவும்.
22. கட்டடங்கள், அணைகள், பாலங்கள் மற்றும் சாலைகள் ஆகியன அமைக்கப் பெறும் தொழிற்சாலையின் பெயர் என்ன ? அதைப் பற்றி குறிப்பு எழுதுக.
23. மின்னணு வாணிகம் என்றால் என்ன ?
24. மறு ஏற்றுமதி வணிகம் என்றால் என்ன ?
25. கொள்கலனாக்கம் – வரைவிலக்கணம் தருக.
26. பண்டக காப்பக ரசீதுக்கும், பண்டக காப்பக பற்றுக் குறிப்புச் சான்றிதழுக்கும் உள்ள வேறுபாடு ஏதேனும் 2 எழுதுக.
27. "இணைய வங்கி" விளக்குக.
28. கடல்சார் காப்பீடு என்றால் என்ன ?
29. செய்தித் தாள் விளம்பரம் என்றால் என்ன ?
30. நுகர்வோர் இயக்கம் என்ற சொல்லை விளக்குக.

## பகுதி – III 7 x 3 = 21

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும், அவற்றில் வினா எண்.31–ற்கு கட்டயமாக விடையளிக்கவும்.**

31. மொத்த வியாபாரிக்கும், சில்லறை வியாபாரிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை (ஏதேனும் 3)
32. வர்த்தக நடவடிக்கைகளின் பிரிவுகள் யாவை ?
33. குறிப்பு எழுதுக.

    அ) பிணை முகவர்கள் ஆ) ஏலதாரர்கள்
34. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலையின் நன்மைகள் ஏதேனும் மூன்றினை விளக்குக.
35. உலக மயமாக்குதலின் தீமைகளை விளக்குக.

www.kalvisolai.com

36. நிலப் போக்குவரத்து என்றால் என்ன் ? அதன் வகைகளை எழுதுக.

37. பண்டக காப்பகத்தின் பணிகளில் ஏதேனும் மூன்றினை விளக்குக.

38. காசோலையின் தன்மைகள் எழுதுக (ஏதேனும் 3)

39. காப்பீடு மற்றும் காப்பீட்டுறுதி வேறுபடுத்துக.

40. பால் மேலும் வெண்மையாக இராசயாணப் பொருட்கள் கலப்பது எந்த வகையான நுகர்வோர் சுரண்டலுக்கு உதாரணம் – விளக்குக.

## பகுதி – IV 7 x 5 = 35

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41. வணிகத்தின் உட்பிரிவுகள் யாவை ?

(அல்லது)

நுகர்வோரின் உரிமை மற்றும் கடமைகளை விவரி (ஏதேனும் 5)

42. மொத்த வியாபாரிகளின் நடைமுறைப் பணிகளை எழுதுக ? (ஏதேனும் 5)

(அல்லது)

பல்வேறு வகையான விளம்பரச் சாதனங்களை விவரி (ஏதேனும் 5)

43. துறைவாரிப் பண்டகச் சாலைகளுக்கும் மடங்குக் கடைகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? (ஏதேனும் 5)

(அல்லது)

காப்பீட்டின் தத்துவங்கள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

44. உலக வர்த்தக அமைப்பின் நன்மைகளை விளக்குக.

(அல்லது)

வணிக வங்கியின் முதன்மைப் பணிகளை விளக்குக

45. வான்வழிப் போக்குவரத்து என்றால் என்ன ? அதன் நன்மைகள் யாவை ? (ஏதேனும் 5)

(அல்லது)

பல்வேறு வகையான பண்டக காப்பகங்களை விவரி (ஏதேனும் 5)

46. வணிகத்தின் தடைகள் யாவை ? அவை எவ்வாறு நீக்கப்படுகின்றன ? (ஏதேனும் 5)

(அல்லது)

மைய வங்கியின் (RBI) பணிகளை விளக்குக. (ஏதேனும் 5)ளளளளள

47. அஞ்சல் வழி வாணிகத்தின் சிறப்புக் கூறுகள் யாவை ? (ஏதேனும் 5)

(அல்லது)

தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் வாடிக்கையாளருக்கு அளிக்கக் கூடிய நன்மைகள் யாவை ?